**Case.No. DVC.02/2018**

**நாள். 06.02.2023**

**<u>ம.சா.2, மாதையன், த.பெ. சேட்டு, வயது , 55, தேவீரஹள்ளி</u>**

**<u>1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் தற்போது தேவீரஹள்ளியில் வசித்து வருகிறேன். எனது வீட்டிற்கும், மனுதாரர் வீட்டிற்கும் சுமார் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். எனது வீட்டிற்கும், எதிர்மனுதாரர் வீட்டிற்கும் அதே 1 1/2 கி.மீ தூரம்தான் இருக்கும். மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள விவரங்கள் என்னிடம் கேட்டு தாக்கல் செய்யவில்லை. அதனால் மனுவில் என்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது எனக்கு தெரியாது என்றால் சரிதான். மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் செவி வழியில் கேள்விப்பட்டு எனக்கு தெரியவரும்என்றால் சரிதான். நான் ஊரில் எஜமான் பொறுப்பில் உள்ளேன். அதனால் ஊரில் உள்ளவர்களுக்கு தேவை என்றால் அவர்களுக்காக உதவ செல்வேன்.

2) மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 26.06.2016 ஆம் வருடம் நடைபெற்றது. மேற்படி திருமணம் ஆனது கட்டாயத்தின் பேரில் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. திருமணத்தை சுமூகமாக எவ்வித பிரச்சனையின்றி எங்கள் ஈடுபாட்டுடன் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு மனுதாரர் எதிர்மனுதாரருடன் பிரச்சனை செய்து திருமணத்தேதியிலிருந்து இருவரும் தனியாக வசித்து வருகிறார்கள் என்று சொன்னால் 10 முதல் 15 நாட்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள். பின்னர் பிரிந்தார்கள்.

3) அவ்வாறு சேர்ந்து வாழவே இல்லை என்றும், அப்போதே பிரிந்துவிட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. மனுதாரர் திருமணத்திற்கு முன்பே காவல் நிலையத்திற்கு சென்று எதிர்மனுதாரர் மீது திருமணம் செய்து வைக்க கேட்டு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி எதிர்மனுதாரரின் பெற்றோர்களுக்கு இத்திருமணத்தில் விருப்பம் இல்லை என்று சொன்னால்

சரியல்ல. எதிர்மனுதாரரின் பெற்றோருக்கு விருப்பமே இல்லை என்றும், வழக்கிற்காக விருப்பம் இருந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4) திருமணத்திற்கு பின்னிட்டு மனுதாரர் மற்றும் 1 ம் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ்ந்த வாழ்க்கை பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் சொன்ன விவரத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் எங்கு வேலை செய்கிறார், என்ன செய்கிறார் என்ற விவரங்கள் தற்போது எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர்கள் வெளியூர் சென்று சுமார் 4 ஆண்டுகள் ஆகிறது.

5) மனுதாரர் 1 ம் எதிர்மனுதாரரை ஒரு தலைபட்சமாக நேசித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. இருவருமே நேசித்தார்கள். அவ்வாறு இருவரும் சேர்ந்து நேசிக்கவில்லை என்றும், மனுதாரர் மற்றும் நேசித்து வந்த காரணத்தினால்தான் அவர் 1ம் எதிர்மனுதாரர் மீது புகார் கொடுத்து திருமணம் செய்து கொண்டு பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. திருமணத்தில் விருப்பம் இல்லாத காரணத்தால்தான் திருமணம் ஆன நாள்முதலே 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரி டமிருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

6) கட்டாயத் திருமணம் என்பதாலும், 1ம் எதிர்மனுதாரருக்கு விருப்பம் இல்லாத காரணத்தினாலும், பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 2,3 எதிர்மனுதாரர்களையும் சேர்த்து கஷ்டப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. திருமணம் ஆன நாள் முதல் மனுதாரர் தனது தாயார் வீட்டில் வசித்து வருவதால் இந்த எதிர்மனுதாரர்களுக்கு அவரை கஷ்டபடுத்த வேண்டும் என்ற வாய்ப்போ, சந்தர்ப்பமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல.

7) மனுதாரருக்கு ஆரம்பம் முதலே பிரச்சனை இருந்திருந்தால் திருமணம் ஆன பொழுதே இந்த மனுவை தாக்கல் செய்திருக்கலாம் என்றால் எதிர்மனுதாரர் நன்றாக வைத்து கொள்வார் என்ற நம்பிக்கையில் அவ்வாறு மனு தாக்கல் செய்யாமல் இருந்திருக்கலாம். மனுதாரர் பின்னிட்டு யோசனை செய்து எதிர்மனுதாரர்களை பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த மனுவை தாக்கல் செய்து தற்போது அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுதாரருக்கு மாமா முறை ஆகும். எதிர்மனுதாரருக்கு சித்தப்பா முறை ஆகும்.

8) எதிர்மனுதாரர்கள் வெளியூருக்கு சென்றவுடன் அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று தெரியுமா என்றால் தற்போது எங்கு இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. மனுதாரர் சட்ட முரணாக ஆதாயம் அடைய தாக்கல் செய்த மனுவில் நான் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. திருமணம் கட்டாயத் திருமணம் என்பதால் திருமணம் நடைமுறைக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் சொல்வது போல் அவருக்கு எதிராக எதிர்மனுதாரர்கள் எவ்வித வன்கொடுமையிலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றும், மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.